DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 405/2024

Miscellaneous :

Sessions : PW8

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சுமன் |
| Father / Husband Name | சேகர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.09.**2025**

**முதல் விசாரணை:**

**1.** நான் நடராஜபுரத்தில் வசித்து பெப்சி கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2012 ம் வருடம் ஒரு நாள் நான் எனது மாமா சுக்கிரி என்பவரை பார்ப்பதற்காக காலை 9.00 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது புக்கத்துறை கூட்ரோடு அருகே விபத்து நடந்தது சம்மந்தமாக போலிசார் படம் வரைந்து அதில் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். இறந்தவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தூரத்து உறவினர் ஆவார். இறந்தவர் எனது ஊர்காரர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 405/2024

Miscellaneous :

Sessions : PW7

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ரஞ்சித்குமார் |
| Father / Husband Name | சேகர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.09.**2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பழமத்தூரில் வசித்து வேன் ஓட்டி வருகிறேன். வழக்கில் இறந்துபோன துரைசாமி எனது மாமா ஆவார். தேதி மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2012 ம் வருடம் ஒரு நாள் இரவு 8.00 மணிக்கு எனது மாமா புக்கத்துறையில் இருந்து செங்கல்பட்டுக்கு செல்லும் சாலையின் ஓரமாக நடந்து சென்றபோது மதுராந்தகம் நோக்கி வந்த லாரி என் மாமாவின் மீது திடீரென்று வந்து மோதி விபத்து ஏற்படுத்தியதில் அவருக்கு தலையில் அடிப்பட்டது. அதை நான் நேரில் பார்த்தேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். லாரி ஓட்டிவந்த நபரை நான் பார்க்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்தில் இறந்தவர் எனது மாமா என்றால் சரிதான். சாலையை கடக்கும் போது தான் அவருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் எனது மாமாவின் கவனக்குறைவால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.